செ.வெ.எண்: 57 நாள்: 30.06.2021

# அரியலூர் மாவட்டம்
# புலம்பெயர்ந்த வெளி மாநில தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்கள் தொகுப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 16 புலம்பெயர்ந்த வெளி மாநில தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்கள் தொகுப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (30.06.2021) வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், கொரோனா நோய் தொற்றுக் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை குறைக்கும் வகையிலும், பெருந்தொற்று நேரத்தில் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும் பொதுவிநியோகத் திட்ட அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.4000/- மற்றும் 14 வயையான மளிகைப் பொருட்களின் தொகுப்பு ஆகியவை வழங்கப்பட்டது.

மேலும், வெளி மாநிலங்களிலிருந்து வேலை நிமித்தமாக அரியலூர் மாவட்டத்தில் உணவகங்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களின் நலனுக்காக கொரோனா பெருந்தொற்று காலத்தில் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் உணவுப் பொருட்கள் தொகுப்புகள் வழங்க உத்தரவிட்டார்கள். இத்தொகுப்பில் ஒவ்வொரு நபர்களுக்கும் தலா 15 கிலோ அரிசி, 1 கிலோ துவரம் பருப்பு, 1 லிட்டர் சமையல் எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகிறது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் உள்ள 16 புலம் பெயர்ந்த வெளி மாநில தொழிலாளர்களுக்கு உணவு பொருட்கள் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், தொழிலாளர் உதவி ஆய்வாளர் குருநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**